©
GOVERNMENT OF TAMIL NADU
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 16.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 355A] சென்னை, செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 10, 2023
புரட்டாசி 23, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2054

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

பக்கங்கள்

**சட்டமுன்வடிவுகள்:**

எண். 24/2023—தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் .. .. .. .. 2-4

எண். 25/2023—தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் .. .. .. 5-8

எண். 26/2023—தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. 9-10

எண். 27/2023—தமிழ்நாடு பட்டுப்புழு விதை (உற்பத்தி வழங்கல் மற்றும் விநியோகம்) (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. 11-15

எண். 28/2023—தமிழ்நாடு வரிகள் (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் .. .. .. 16-29

எண். 29/2023—தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் (திருத்தச்) சட்டம்) .. 30-38

எண். 30/2023—2023 ஆம் ஆண்டு சீட்டு நிதி (தமிழ்நாடு (திருத்தச்) சட்டம்) .. .. .. 39-41

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 24/2023**

**1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காவது ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2023 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

12–B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் XX/1951.

2. 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் 12–B ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக, அதன் கீழுள்ள விளக்கம் மற்றும் வரம்புரை நீங்கலாக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1) 1947 ஆகஸ்டு 15–ஆம் நாளுக்குப் பின்பு, சட்டமன்றப்பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் அல்லது இரண்டின் ஓர் உறுப்பினராக இருந்த நபர் ஒவ்வொருவருக்கும், மாதம் ஒன்றுக்கு முப்பதாயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படுதல் வேண்டும்.".

**நோக்கக் காரண விளக்கவுரை.**

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19ஆம் தேதி அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மற்றவற்றுக்கிடையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையானது ரூ.25,000/–லிருந்து (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) ஆக, 2023ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1ஆம் தேதியிலிருந்து உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

2. மேற்சொன்ன அறிவிப்பிற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், அரசானது, 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் XX/1951) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இந்த சட்ட முன்வடிவானது சட்டமாக இயற்றப்பட்டு செயற்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் போது, மாநில அரசின் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக செய்ய நேரிடும் கூடுதல் செலவினமானது தோராயமாக ஆண்டிற்கு ரூ.6,54,00,000/–(ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்தி நான்கு இலட்சம் மட்டும்) ஆகும்.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/2023**

**2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தை திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்படும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/2019

9 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

**2.** (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

"9. "இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம் .– (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக, இணைப்புப் பட்டியலில் பல்கலைக்கழகத்தின் பெயரைச் சேர்த்தல் வேண்டும் மற்றும் அத்தகைய அறிவிக்கை வெளியிடப்பட்டதன் பேரில், அதற்கிணங்க இணைப்புப் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2. (1) ஆம் உட்பிரிவில் உள்ளடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓர் அறிவிக்கை வெளியிடப்பட்டிருக்குமிடத்து, அது இடைப்பட்ட காலத்தில் இரத்து செய்யப்பட்டிருந்தாலன்றி, கூடுமான விரைவில், ஆனால் எந்நேர்விலும் சட்டமன்றப் பேரவையின் அடுத்த அமர்வின் போது, அறிவிக்கையின் வெளியீட்டு தேதிக்குப் பின்னர் இணைப்புப் பட்டியலில் பல்கலைக்கழகத்தின் பெயரைச் சேர்ப்பதற்கு செயல்திறம் அளிப்பதற்கான ஒரு சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்துதல் வேண்டும் மற்றும் அத்தகைய சட்டமுன்வடிவு சட்டமாகும் போது அறிவிக்கையானது செயல்திறம் கொண்டிருப்பது அற்றுப்போதல் வேண்டும்:

வரம்புரையாக, சட்டமன்றப் பேரவை அமர்வில் இருக்கும் போது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்டிருப்பின், அத்தகைய சட்டமுன்வடிவானது அந்த அமர்வின் போது சட்டமன்றப் பேரவையில் அறிமுகம் செய்யப்படுதல் வேண்டும்."

இணைப்புப் பட்டியலின் மாற்றீடு.

**3.** முதன்மைச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலுக்காகப், பின்வரும் இணைப்புப் பட்டியலானது மாற்றீடு செய்யப்படுதல் வேண்டும், அதாவது:–

"இணைப்புப்பட்டியல்.
[3 மற்றும் 9 பிரிவுகளைக் காண்க]

| வரிசை எண். | தனியார் பல்கலைக்கழகங்களின் பெயர் மற்றும் அமைவிடம் (முகவரி) | தனியார் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்ட தேதி. | ஆதரவளிக்கும் அமைப்புகளின் பெயர் மற்றும் முகவரி | ஆதரவளிக்கும் அமைப்புகளின் பதிவு விபரங்கள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | தனலெஷ்மி சீனிவாசன் பல்கலைக்கழகம், என்.ஹெச் 45, திருச்சி சென்னை நீள பெருவழிச்சாலை, (சமயபுரம் சுங்கச்சாவடி அருகில்) சமயபுரம் அஞ்சல், மண்ணச்ச நல்லூர் தாலுகா, திருச்சி மாவட்டம் – 621 112. | 20.01.2021 | திருவாளர். தனலெஷ்மி சீனிவாசன் தொண்டு மற்றும் கல்வி அறக்கட்டளை, 274/சி, துறையூர் ரோடு, பெரம்பலூர் – 621 212. | தமிழ்நாடு, பெரம்பலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 21.01.1994 அன்று புத்தக எண். 4இல், எண். 3/1994, தொகுதி – 38, பக்கங்கள் 111–118–இன் படி அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 2. | ஸ்ரீ அனுசுயா பல்கலைக்கழகம், சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை, கீழ்இடையலம் கிராமம் மற்றும் அஞ்சல் திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்–604 302. | 25.02.2021 | ஆழ்வார்கள் ஆய்வு மையம், எண்–1 முதல் பிரதான சாலை, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை – 600 020. | தமிழ்நாடு, அடையாறு சார்பதிவாளர் அலுவலகத்தில் 12.01.2017 அன்று புத்தக எண்–IVஇல் எண் 7/2017 இன் படி அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டது. |
| 3. | ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் | 26.02.2021 | ஏ.ஆர்.ஆர். அறக்கட்டளை, 31/B, ஜவகர்லால் நேரு சாலை, (100 அடிரோடு) திருநகர், வடபழனி, சென்னை– 600 026. | தமிழ்நாடு, சென்னை கோடம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 18.07.2012 அன்று புத்தகம் 4–இல் எண் 525 / 2012– இன்படி அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 4. | என் எம் வி பல்கலைக்கழகம், முத்துராமலிங்கபுரம் கிராமம், அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம். | 26.02.2021 | வீரையன் சரஸ்வதி அறக்கட்டளை, எண். 103, பழைய எண். 51, சம்பத் நகர், பிரதானசாலை, ஈரோடு– 638 011. | தமிழ்நாடு, ஈரோடு இணை 1–ன், இணை–2 சார்பதிவாளர் அலுவலகத்தில் 27.07.2015 அன்று புத்தகம் IV–இல் 169 / 2015– இன்படி அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 5. | ஜேப்பியார் பல்கலைக்கழகம், செம்மஞ்சேரி கிராமம், சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை மாவட்டம்–600 119. | 26.02.2021 | ஜேப்பியார் கல்வி அறக்கட்டளை, புதிய எண். 29 A, பழைய எண். 12, கணபதி தெரு, இராயப்பேட்டை, சென்னை–600 014. | தமிழ்நாடு, மத்திய சென்னை இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 05.05.1987 அன்று புத்தகம் 4, தொகுதி 16, பக்கங்கள் 163–173–இல் 100 / 1987– இன்படி அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டது. |
| 6. | தட்சசீலா பல்கலைக்கழகம், ஒங்கூர் (அஞ்சல்), திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்–604 305. | 27.05.2022 | மயிலம் சுப்ரமணியசுவாமி அறக்கட்டளை, எண். 54, மீனாட்சிநகர், பூந்தோட்டம், விழுப்புரம் – 605 602. | இந்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் துறை மைய அமைச்சகம், மையப் பதிவு, நிறுமங்களின் பதிவாளர் அலுவலகத்தில் 13.10.2020 அன்று 2013ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் (மையச் சட்டம் 18/ 2013)ன் கீழ் நிறுமமாகப் பதிவு செய்யப்பட்டு, பெருநிறுவன அடையாள எண் U80900TN2020NPL138600 வழங்கப்பட்டுள்ளது. |

| வரிசை எண். | தனியார் பல்கலைக்கழகங்களின் பெயர் மற்றும் அமைவிடம் (முகவரி) | தனியார் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்ட தேதி. | ஆதரவளிக்கும் அமைப்புகளின் பெயர் மற்றும் முகவரி | ஆதரவளிக்கும் அமைப்புகளின் பதிவு விபரங்கள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 7. | ஜாய் பல்கலைக்கழகம், ராஜா நகர், அழகனேரி, வடக்கன்குளம், ராதாபுரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்—627 116. | 26.07.2022 | செல்வம் கல்வி மற்றும் தொண்டு அறக்கட்டளை, ராஜா நகர், வடக்கன்குளம், திருநெல்வேலி, தமிழ்நாடு—627 116. | பணகுடி சார் பதிவாளர் அலுவலகத்தில் புத்தகம் I தொகுதி 663-இல் 712/ 1985 – இன்படி அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டது. |

**நோக்க காரண விளக்கவுரை.**

2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 14 / 2019) அதன் இணைப்புப் பட்டியலில் பல்கலைக்கழகத்தின் பெயர், அதன் அமைவிடம் மற்றும் ஆதரவளிக்கும் அமைப்பின் விபரங்களைச் சேர்ப்பதன் மூலம், ஆதரவளிக்கும் அமைப்பு எதனாலும் ஒரு தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான அனுமதி அளிப்பதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது. உறுதிக் கடிதத்தின் நிபந்தனைகளை ஆதரவளிக்கும் அமைப்பு பூர்த்தி செய்திருக்கிறது என உறுதி செய்து கொண்ட பின்னர், அரசால், இணைப்புப் பட்டியலைத் திருத்தம் செய்வதற்குக் கூறப்பட்ட சட்டத்தின் 9 ஆம் பிரிவு வகைசெய்கிறது. அதற்கிணங்க, அறிவிக்கைகளின் வாயிலாக அதை திருத்தம் செய்து இணைப்புப் பட்டியலில் இதுவரை 7 தனியார் பல்கலைக்கழகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

2. 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டத்தின் (மையச் சட்டம் III / 1956) 2 (f) ஆம் பிரிவு, பல்கலைக்கழகம் என்பது, ஒரு மையச் சட்டம் அல்லது ஒரு மாகாணச் சட்டம் அல்லது ஒரு மாநிலச் சட்டத்தினால் அல்லது அவற்றின் வழியாக நிறுவப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட, ஒரு பல்கலைக்கழகம் என்று பொருள்படும், மற்றும் தொடர்புடைய பல்கலைக்கழகத்துடன் கலந்தாய்ந்து, ஆணையத்தால் அங்கீகரிக்கப்படலாகும் அத்தகைய நிறுவனம் எதையும் உள்ளடக்கும், என்று நிர்ணயிக்கிறது என பல்கலைக்கழக மானியக் குழு எடுத்துரைக்கிறது. எனவே, மேற்கூறப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களை தனி சட்டம் மூலம் நிறுவ அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு சட்டத்தின் மூலம் கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 14 / 2019—இன் இணைப்புப் பட்டியலில் பல்கலைக்கழகங்களின் பெயர்களைச் சேர்க்கக் கோரியுள்ளது.

3. மேற்சொன்ன நோக்கத்திற்காக மற்றும் மாணவர் சமுதாயத்தின் நலனைப் பாதுகாப்பதற்காகக் கூறப்பட்ட சட்டத்தின் இணைப்பு பட்டியலில் உள்ள கூறப்பட்ட ஏழு தனியார் பல்கலைக்கழகங்களைச் சேர்ப்பதற்கு வகை செய்யவும் கூறப்பட்ட சட்டத்தை இதன்பின்பு திருத்தம் செய்வதற்கு, அந்த நோக்கத்திற்காக, அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்பு, இணைப்புப் பட்டியலில் பல்கலைக்கழகத்தின் பெயரைச் சேர்ப்பதற்குச் செயல்திறத்தைக் கொடுப்பதற்குக் கூடுமானவரையில் விரைவாக, ஒரு சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கும், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 14 / 2019) திருத்தம் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவு மேற்கண்ட முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர் க. பொன்முடி,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/2023**

**1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் X/1937.

18–B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 18–B ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில்,–

(1) (a) கூறில், ‘‘இருநூற்று ஐம்பது ரூபாய்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘ஐந்நூறு ரூபாய்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (b) கூறில், ‘‘முந்நூறு ரூபாய்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘அறுநூறு ரூபாய்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (c) கூறில், ‘‘ஐந்நூறு ரூபாய்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘ஆயிரம் ரூபாய்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

மாநிலத்தின் வருவாயைப் பெருக்கும் நோக்கில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களின் மீது விதிக்கப்படக்கூடிய ஆயத்தீர்வையின் அதிகப்பட்ச தொகையினை, சாதாரண வகைகளைப் பொறுத்த நேர்வில், புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு இருநூற்று ஐம்பது ரூபாயிலிருந்து ஐந்நூறு ரூபாய்க்கும், நடுத்தர வகைகளைப் பொறுத்த நேர்வில், புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு முந்நூறு ரூபாயிலிருந்து அறுநூறு ரூபாய்க்கும், உயர்தர வகைகளைப் பொறுத்த நேர்வில், புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய்க்கும் உயர்த்துவதென முடிவு செய்துள்ளது.

2. மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு, 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) 18–B ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சு. முத்துசாமி,**
*வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற*
*வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 27/2023**

**1956–ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டுப்புழு விதைச் (உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டுப்புழு விதை (உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். *குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.*

(2) (1) 7 ஆம் பிரிவானது, 1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) எஞ்சியுள்ள அனைத்துப் பிரிவுகளும், 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*தமிழ்நாடு சட்டம் XXIII/1956.* **2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டுப்புழு விதைச் (உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம்) சட்டத்தின் நெடுந்தலைப்பில், ''பட்டுப்புழு விதை'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''மற்றும் கச்சாப்பட்டு'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். *நெடுந்தலைப்பிற்கான திருத்தம்.*

**3.** முதன்மைச் சட்டத்தின் முன்னுரையில், ''பட்டுப்புழு விதை'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''மற்றும் கச்சாப்பட்டு'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். *முன்னுரைக்கான திருத்தம்.*

**4.** முதன்மைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிலுள்ள, ''பட்டுப்புழு விதை'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''மற்றும் கச்சாப்பட்டு'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும். *குறுந்தலைப்பிற்கான திருத்தம்.*

**5.** முதன்மைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,– *2 ஆம் பிரிவிற்கான திருத்தம் .*

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) (b) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(b) ''இயக்குநர்'' என்பவர் பட்டு வளர்ச்சித் துறையின் இயக்குநர் ஆவார்;'';

(ii) (b) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(bb) ''நிதியம்'' என்பது 9–B ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி என்று பொருள்படும்'';

(2) (2) ஆம் உட்பிரிவில், ‘‘தமிழ்நாடு, தொழில் மற்றும் வணிகத் துறையின் பட்டு வளர்ச்சிப் பிரிவினை பொறுப்பில் கொண்டுள்ள அலுவலர்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘இயக்குநர்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவுகளானவை உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:— 9–A மற்றும் 9–B எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**“9–A விற்பவர் மற்றும் உரிமம் பெற்ற வாங்குபவரின் மீது கட்டணம் விதித்தல்.—(1)** பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டினை விற்பவர் மற்றும் உரிமம் பெற்ற வாங்குபவர் ஒவ்வொருவரின் மீதும், பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டினுடைய மதிப்பின் புள்ளி ஏழு ஐந்து விழுக்காடு (0.75%) கட்டணமானது விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட கட்டணம் மற்றும் விற்பவர் மற்றும் உரிமம் பெற்ற வாங்குபவர் ஒவ்வொருவரிடமிருந்தும் வசூலிக்கப்பட்ட கட்டணமானது நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, (1) ஆம் உட்பிரிவின் கீழ் விதிக்கப்படத்தக்க கட்டணத்தை பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டினுடைய மதிப்பின் இரண்டு விழுக்காட்டிற்கு மேற்படாத அத்தகைய அளவிற்கு உயர்த்தலாம்.

**9–B பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி.—(1)** பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி என அழைக்கப்படலாகும் நிதியம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) 9–A ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட கட்டணம் மற்றும் அரசினால் அந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மானியங்கள் ஏதேனுமிருப்பின், அது நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) நிதியமானது, இயக்குநரால் செயல்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) நிதியமானது, பட்டு வளர்ச்சித் தொழில் மேம்பாட்டின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும்.’’.

7. அவ்வாறு உட்புகுத்தப்பட்ட 9–B ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 9–C எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

**“9–C பட்டு வளர்ச்சி மேம்பாட்டுக் குழு.—**

(1) அரசானது, ஆணையின் மூலம்,—

(i) கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்— பதவி வழி தலைவர்;

(ii) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்— பதவி வழி உறுப்பினர்;

(iii) பட்டு வளர்ச்சித் துறையின் இயக்குநர்—பதவி வழி உறுப்பினர்—செயலாளர்;

(iv) காஞ்சிபுரம், அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தின் துணை இயக்குநர்— பதவி வழி உறுப்பினர்; மற்றும்

(v) பெங்களூரு, மத்திய பட்டு வாரியத்தின் பிரதிநிதி— உறுப்பினர்,

ஆகியோரைக் கொண்டுள்ள பட்டு வளர்ச்சி மேம்பாட்டுக்குழு என அறியப்படலாகும் ஒரு குழுவினை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) குழுவானது, ஆண்டிற்கு ஒரு முறையாவது, தலைவரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய தேதி மற்றும் நேரத்தில் கூடுதல் வேண்டும்.

(3) பட்டு வளர்ப்புத் தொழிலின் மேம்பாட்டிற்காக, நிதியைப் பயனுறும் வகையில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை குழுவானது பரிந்துரை செய்தல் வேண்டும்.''.

8. முதன்மைச் சட்டம் அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு எவற்றாலும் வழங்கப்பட்ட தீர்ப்பு, தீர்ப்புரை அல்லது ஆணை எதிலும் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாளன்று தொடங்கும் காலத்திலிருந்தும், **தமிழ்நாடு அரசிதழில்** இந்தச் சட்டம் வெளியிடப்படும் தேதியுடன் முடிவடையும் காலத்தின் போதும், பட்டு வளர்ச்சி மேம்பாட்டுக் குழுவின் இயக்குநர் மற்றும் அரசினால் செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது விதிக்கப்பட்ட மற்றும் வசூலிக்கப்பட்ட கட்டணம் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு முதன்மைச் சட்டத்தின் கீழ் செல்லுந்தன்மையுடன் செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும். செல்லுந்தன்மை.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டுப்புழு விதைச் (உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் XXIII/1956) மாநிலத்தில் பட்டுப்புழு விதையின் உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வகைசெய்கிறது. அரசானது, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் 24.05.1990 ஆம் தேதியிட்ட அரசாணை (நிலை) எண். 178 –இல், "பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி" என அழைக்கப்படலாகும் ஒரு நிதியத்தை அமைத்துருவாக்குவதற்கான ஆணையை வெளியிட்டும், பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டினை விற்பவர், மற்றும் வாங்குபவர் ஆகியோரிடமிருந்து, பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டினுடைய மதிப்பின், புள்ளி ஏழு ஐந்து விழுக்காடு (0.75%) கட்டணத்தை வசூலிக்குமாறும், அதனை நிதியத்தில் வரவு வைக்குமாறும் ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் அரசானது, கூறப்பட்ட நிதியை பயனுறும் வகையில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்வதற்கு குழு ஒன்றினை கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் 20.12.1996 ஆம் தேதியிட்ட அரசாணை (நிலை) எண். 217 –இன் படி அமைத்துருவாக்கியுள்ளது. மேற்சொன்ன ஆணைகளுக்கு சட்டப்பூர்வமான அங்கீகாரம் அளிப்பதற்கு அரசானது, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் XXIII/1956–ஐ மேற்சொன்ன நோக்கத்திற்காக தக்கவாறு திருத்துவதெனவும், மேற்சொன்ன இரு அரசாணைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை செல்லத்தக்கதாக்குவதெனவும் முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**தா. மோ. அன்பரசன்,**
*குறு, சிறு மற்றும் நடுத்தரத்*
*தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்டமுன்வடிவின் 6 மற்றும் 7 ஆம் கூறுகளினால் உட்புகுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டவாறான **1956** ஆம் ஆண்டு தமிழ்நாடு பட்டுப்புழு விதைச் (உற்பத்தி, வழங்கல் மற்றும் விநியோகம்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XXIII/**1956**) 9–A மற்றும் 9–C பிரிவுகளானவை, அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, முறையே, அறிவிக்கை மற்றும் ஆணையினை பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**தா. மோ. அன்பரசன்,**
*குறு, சிறு மற்றும் நடுத்தரத்*
*தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/2023**

வணிகவரி மற்றும் பதிவுத் துறையினால் நிருவகிக்கப்படும் குறித்த சில வரிகள் தொடர்பான வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் நிலுவைகளைத் தீர்வு செய்வதற்காகவும், மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

(i) நீக்கறவு செய்யப்பட்ட 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், — தமிழ்நாடு சட்டம் 1/1959.

(ii) நீக்கறவு செய்யப்பட்ட 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரிச்) சட்டம், — தமிழ்நாடு சட்டம் 24/1971.

(iii) நீக்கறவு செய்யப்பட்ட 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், — தமிழ்நாடு சட்டம் 14/1970.

(iv) நீக்கறவு செய்யப்பட்ட 1981–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், — தமிழ்நாடு சட்டம் 6/1981.

(v) நீக்கறவு செய்யப்பட்ட 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களை கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டம், — தமிழ்நாடு சட்டம் 20/2001.

(vi) நீக்கறவு செய்யப்பட்ட 1990–ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டம், — தமிழ்நாடு சட்டம் 13/1990.

(vii) நீக்கறவு செய்யப்பட்ட 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், — தமிழ்நாடு சட்டம் X/1939.

(viii) நீக்கறவு செய்யப்பட்ட 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம், — தமிழ்நாடு சட்டம் 22/1983.

(ix) நீக்கறவு செய்யப்பட்ட 1935–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், — தமிழ்நாடு சட்டம் XX/1935.

(x) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம், மற்றும் — தமிழ்நாடு சட்டம் 32/2006.

(xi) 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம் — மையச் சட்டம் 74/1956.

ஆகியவற்றின்கீழ், நேர்விற்கேற்ப, வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் நிலுவைகளைத் தீர்வு செய்வதற்காக வகை செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிகள் (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் என அழைக்கப் பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) ''ஏற்றுக்கொள்ளப்பட்ட வரி'' என்பது, விவர அறிக்கைகள், வரவு–செலவுப் புத்தகத்தின் படி செலுத்தத்தக்க வரி அல்லது தொடர்புடைய சட்டத்தின்கீழ் வரிக்கணக்கிடும் அதிகார அமைப்பினால் கணக்கிடப்பட்ட வரி என்று பொருள்படும், ஆனால் பூசலுக்குள்ளான வரியை உள்ளடக்காது;

(b) ''விண்ணப்பதாரர்'' என்பவர், தொடர்புடைய சட்டத்தின் கீழ் வரி செலுத்த பொறுப்புடையவராகும் வணிகர் அல்லது நபர் எவரும் ஆவார்;

(c) ''வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை நிலுவைகள்'' என்பது, நேர்விற்கேற்ப, தொடர்புடைய சட்டத்தின்கீழ் 2021–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னதாக வரிக்கணிப்பு செய்யப்பட்டுள்ள, 2017–2018 வரையிலான வரிக்கணிப்பு ஆண்டுகள் தொடர்பான மற்றும் இந்தச் சட்டத்தின்கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட தேதியன்று வசூலிக்கப்படுவதற்கு நிலுவையிலுள்ள,–

(i) தொடர்புடைய சட்டத்தின்கீழ் வரிக்கணிப்பின் பேரில் விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தத்தக்க விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி, மதிப்புக்கூட்டு வரி, மைய விற்பனை வரி, ஆடம்பர வரி, விளம்பர வரி, கேளிக்கைகள் வரி, நுழைவு வரி அல்லது பந்தய வரி உள்ளடங்கலான வரி;

(ii) தொடர்புடைய சட்டத்தின்கீழ் விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தப்படத்தக்க தண்டத்தொகை ; அல்லது

(iii) தொடர்புடைய சட்டத்தின்கீழ் விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தப்படத்தக்க வட்டித்தொகை,

என்று பொருள்படும்;

(d) ''தீர்வுசெய்தல் சான்றிதழ்'' என்பது, தொடர்புடைய சட்டத்தின்கீழ் வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை ஆகிவற்றின் நிலுவைகளைத் தீர்வு செய்வதற்காக, இந்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் என்று பொருள்படும்;

(e) ''உறுதிமொழிப் படிவம்'' என்பது, குறைக்கப்பட்ட அல்லது சலுகைவீத வரியில் சரக்குகளை விற்பனை செய்தல் அல்லது கொள்முதல் செய்தலுக்காக அல்லது வரி விலக்கிற்காக தொடர்புடைய சட்டத்தின்கீழ் வகுத்துரைக்கப்பட்ட படிவம் அல்லது சான்றிதழ் என்று பொருள்படும்;

(f) ''நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பு'' என்பது 3–ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஓர் அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(g) ''பூசலிலுள்ள வரி'' என்பது, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று அதிகார அமைப்பு, தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம் எதனின் முன்பும் எந்த வரிக்கணக்கிடும் அதிகார அமைப்பிற்கு எதிராக மேல்முறையீடு, சீராய்வு அல்லது மறுஆய்வு நிலுவையில் உள்ளதோ, தொடர்புடைய சட்டத்தின்கீழ் உள்ள அந்த வரிக்கணக்கிடும் அதிகார அமைப்பினால் தீர்மானிக்கப்பட்ட வரியின் மொத்த அல்லது பகுதி என்று பொருள்படும்;

(h) ''அரசு" என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(i) ''தொடர்புடைய சட்டம்" என்பது, நேர்விற்கேற்ப,—

(i) நீக்கறவு செய்யப்பட்ட 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் 1/1959.

(ii) நீக்கறவு செய்யப்பட்ட 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரிச்) சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் 24/1971.

(iii) நீக்கறவு செய்யப்பட்ட 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் 14/1970.

(iv) நீக்கறவு செய்யப்பட்ட 1981–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் 6/1981.

(v) நீக்கறவு செய்யப்பட்ட 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களை கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் 20/2001.

(vi) நீக்கறவு செய்யப்பட்ட 1990–ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் 13/1990.

(vii) நீக்கறவு செய்யப்பட்ட 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் X/1939.

(viii) நீக்கறவு செய்யப்பட்ட 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் 22/1983.

(ix) நீக்கறவு செய்யப்பட்ட 1935–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் XX/1935.

(x) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம்; அல்லது — தமிழ்நாடு சட்டம் 32/2006.

(xi) 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம் என்று பொருள்படும். — மையச் சட்டம் 74/1956.

(2) பொருள் அல்லது தறுவாயில் முரணாக ஏதேனும் இருந்தாலன்றி, இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, ஆனால், பொருள் வரையறை செய்யப்படாமலுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அனைத்தும், தொடர்புடைய சட்டத்தில், அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளையே கொண்டிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 19/2017.

நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பு.

3. இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அரசானது, அறிவிக்கை வாயிலாக, 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் 3–ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்களை, நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பாக நியமிக்கலாம் மற்றும் அரசு, அந்த அறிவிக்கையில் குறிப்பிடக்கூடியவாறு பரப்பிடம் அல்லது பரப்பிடங்களின் மீது அத்தகைய அதிகார அமைப்பானது அதிகார வரம்பினை செலுத்துதல் வேண்டும்.

தீர்வு செய்தலுக்கான தகுதியுடைமை.

4. இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகளுக்கு உட்பட்டு, விண்ணப்பம் தாக்கல் செய்யப்படும் தேதியன்று, தொடர்புடைய சட்டத்தின்கீழுள்ள அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் எதனின் முன்பும் அல்லது நீதிமன்றம் எதனின் முன்பும், மேல்முறையீடு அல்லது சீராய்வு அல்லது மறுஆய்வு ஒன்று நிலுவையில் இல்லாத போது, 2021–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னதாக வரிக்கணிப்பு செய்யப்பட்டுள்ள 2017–2018 வரையிலான வரிக்கணிப்பு ஆண்டுகள் தொடர்பான வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கான விண்ணப்பம் ஒன்றினை செய்வதற்கு தகுதியுடையவராவார்:

வரம்புரை.– இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று, தொடர்புடைய சட்டத்தின்கீழ் அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் எதிலும் அல்லது நீதிமன்றம் எதிலும் மேல்முறையீடு, சீராய்வு அல்லது மறுஆய்வு எதுவும் நிலுவையில் இருக்கும் நேர்வுகளில், நிலுவைத்தொகையை தீர்வு செய்வதற்கான விண்ணப்பமானது, நேர்விற்கேற்ப, அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட, திரும்ப பெறுவதற்கான ஓர் அனுமதி படியுடன் சேர்த்து செய்யப்படுதல் வேண்டும்.

மேலும் வரம்புரை.– இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று, தொடர்புடைய சட்டத்தின்கீழ் அதிகார அமைப்பு, தீர்ப்பாயம் எதிலும் அல்லது நீதிமன்றம் எதிலும் அரசால் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இருக்கும் நேர்வுகளில், நேரிணையான தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையுடன் சேர்த்து, பூசலுக்குள்ளான வரியாக அத்தகைய கோருரிமைகளை நடத்தி, அரசால் கோரப்படும் வரியின்படி, நிலுவைத் தொகையைத் தீர்வுசெய்வதற்கான விண்ணப்பமானது செய்யப்படுதல் வேண்டும்.

தீர்வு செய்வதற்கான விண்ணப்பம்.

5. (1) 4–ஆம் பிரிவின் நோக்கத்திற்கான விண்ணப்பமானது, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள் அல்லது, அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, அவ்வப்போது, குறித்துரைக்கலாகும் அத்தகைய தேதிக்குப் பின்னர் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும், 7–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் தொகையைச் செலுத்தியதற்கான சான்றுடன் சேர்த்து நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) வரிக்கணிப்பு ஆண்டு ஒவ்வொன்றிற்கும், தனி விண்ணப்பமொன்று செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டிய தொகையைத் தீர்மானித்தல்.

6. (1) நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, 5—ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்களின் பிழையின்மையை, தொடர்புடைய பதிவுருக்கள் அனைத்தையும் மேற்கோள்காட்டி சரிபார்த்தல் வேண்டும் மற்றும் 7—ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தத்தக்க தொகையைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது விண்ணப்பதாரரால், விண்ணப்பத்துடன் சேர்த்து செலுத்தப்பட்ட தொகை, (1)—ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட தொகையிலிருந்து குறைவாக இருந்தால், வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பதாரரால் செலுத்தத்தக்க அதிகப்படியான தொகையை கோருதல் வேண்டும்.

(3) (1)—ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட தொகையானது, அதற்கடுத்த ரூபாய்க்கு முழுமையாக்கப்படுதல் வேண்டும் மற்றும் இந்நோக்கத்திற்காக, அத்தகைய தொகையானது ஒரு ரூபாயின் ஒரு பகுதியை கொண்டிருக்குமிடத்து மற்றும் அத்தகைய பகுதியானது ஐம்பது பைசா அல்லது அதற்கு மேலாக இருந்தால், அதற்கடுத்த எண்ணிக்கையிலான ரூபாயாகக் கணக்கிடப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய பகுதியானது ஐம்பது பைசாவுக்குக் குறைவாக இருந்தால், அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை.

செலுத்தத்தக்க தொகையினை நிர்ணயிப்பதில் பொருந்தக் கூடிய வீதம்.

7. (1) விண்ணப்பதாரரால் செலுத்தத்தக்க மற்றும் தள்ளுபடி செய்யப்படவேண்டிய தொகையானது பின்வருமாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்:—

(a) இந்தச் சட்டத்தின்கீழ் தீர்வு செய்தலுக்காக விண்ணப்பிக்கும் தேதியில் ஒரு வரிக்கணிப்பு ஆண்டுக்கான வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் மொத்த நிலுவை ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் மேற்பட்டு மற்றும் பத்து இலட்சம் ரூபாய் வரை இருக்குமிடத்து, அவருக்கு மிகவும் நலம் பயக்கும் பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றின்கீழ் தொகை செலுத்துவதற்கு விண்ணப்பதாரர் ஒரு தெரிவுரிமை கொண்டிருப்பார்:—

(i) வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் மொத்த நிலுவைகளில் இருபது விழுக்காட்டை செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் செலுத்தத்தக்க வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகையின் எஞ்சியுள்ள நிலுவைத் தொகைகள் தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்; அல்லது

(ii) (1) அனுமதிக்கப்பட்ட வரியில், தண்டத்தொகையின் பத்து விழுக்காட்டுடன் சேர்த்து, அறுபத்து ஆறு விழுக்காடு மற்றும் வட்டித்தொகையின் பத்து விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க அனுமதிக்கப்பட்ட வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(2) பூசலுக்குள்ளான வரியில், தண்டத்தொகையின் பத்து விழுக்காட்டுடன் சேர்த்து, முப்பத்தி மூன்று விழுக்காடும் மற்றும் வட்டித்தொகையின் பத்து விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க பூசலுக்குள்ளான வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(3) தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை அல்லது அவை இரண்டின் நிலுவைத்தொகை தொடர்புடையதாக இருக்குமிடத்து மற்றும் வரி நிலுவை இல்லாதிருப்பின், வட்டித்தொகையின் பத்து விழுக்காடும், தண்டத்தொகையின் பத்து விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க வட்டித்தொகை அல்லது தண்டத்தொகை அல்லது அவை இரண்டும் தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(b) இந்தச் சட்டத்தின்கீழ் தீர்வு செய்தலுக்காக விண்ணப்பிக்கும் தேதியில் ஒரு வரிக்கணிப்பு ஆண்டுக்கான வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் மொத்த நிலுவை, பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு மற்றும் ஒரு கோடி ரூபாய் வரையிலும் இருப்பின், விண்ணப்பதாரர்,—

(i) அனுமதிக்கப்பட்ட வரியில், தண்டத்தொகையின் பத்து விழுக்காட்டுடன் சேர்த்து, அறுபத்து ஆறு விழுக்காடு மற்றும் வட்டித்தொகையின் பத்து விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க அனுமதிக்கப்பட்ட வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(ii) பூசலுக்குள்ளான வரியில், தண்டத்தொகையின் பத்து விழுக்காட்டுடன் சேர்த்து, முப்பத்தி மூன்று விழுக்காடும் மற்றும் வட்டித்தொகையின் பத்து விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க பூசலுக்குள்ளான வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(iii) தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை அல்லது அவை இரண்டின் நிலுவைத்தொகை தொடர்புடையதாக இருக்குமிடத்து மற்றும் வரி நிலுவை இல்லாதிருப்பின், தண்டத்தொகையின் பத்து விழுக்காடும், வட்டித்தொகையின் பத்து விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை அல்லது அவை இரண்டும் தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(c) இந்தச் சட்டத்தின்கீழ் தீர்வு செய்தலுக்காக விண்ணப்பிக்கும் தேதியில் ஒரு வரிக்கணிப்பு ஆண்டுக்கான வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் மொத்த நிலுவை, ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு மற்றும் பத்து கோடி ரூபாய் வரையிலும் இருப்பின், விண்ணப்பதாரர்,—

(i) அனுமதிக்கப்பட்ட வரியில், தண்டத்தொகையின் பதினைந்து விழுக்காட்டுடன் சேர்த்து, எழுபத்து ஐந்து விழுக்காடு மற்றும் வட்டித்தொகையின் இருபது விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க அனுமதிக்கப்பட்ட வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(ii) பூசலுக்குள்ளான வரியில், தண்டத்தொகையின் பதினைந்து விழுக்காட்டுடன் சேர்த்து, ஐம்பது விழுக்காடு மற்றும் வட்டித்தொகையின் இருபது விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க பூசலுக்குள்ளான வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(iii) தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை அல்லது அவை இரண்டின் நிலுவைத்தொகை தொடர்புடையதாக இருக்குமிடத்து மற்றும் வரி நிலுவை இல்லாதிருப்பின், தண்டத்தொகையின் பதினைந்து விழுக்காடும், வட்டித்தொகையின் இருபது விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை அல்லது அவை இரண்டும் தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(d) இந்தச் சட்டத்தின்கீழ் தீர்வு செய்தலுக்காக விண்ணப்பிக்கும் தேதியில் ஒரு வரிக்கணிப்பு ஆண்டுக்கான வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் மொத்த நிலுவை, பத்து கோடி ரூபாய்க்கு மேற்பட்டு இருப்பின், விண்ணப்பதாரர்,—

(i) அனுமதிக்கப்பட்ட வரியில், தண்டத்தொகையின் பதினைந்து விழுக்காட்டுடன் சேர்த்து, தொண்ணூறு விழுக்காடு மற்றும் வட்டித்தொகையின் முப்பது விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க அனுமதிக்கப்பட்ட வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(ii) பூசலுக்குள்ளான வரியில், தண்டத்தொகையின் பதினைந்து விழுக்காட்டுடன் சேர்த்து, அறுபது விழுக்காடு மற்றும் வட்டித்தொகையின் முப்பது விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க பூசலுக்குள்ளான வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(iii) தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை அல்லது அவை இரண்டின் நிலுவைத்தொகை தொடர்புடையதாக இருக்குமிடத்து மற்றும் வரி நிலுவை இல்லாதிருப்பின், தண்டத்தொகையின் பதினைந்து விழுக்காடும், வட்டித்தொகையின் முப்பது விழுக்காடும் செலுத்துதல் மற்றும் அத்தகைய செலுத்தத்தின் பேரில் எஞ்சியுள்ள செலுத்தத்தக்க தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை அல்லது அவை இரண்டும் தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும்;

(2) தொடர்புடைய சட்டத்தில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், நேர்விற்கேற்ப, வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை செலுத்தத்தின் போது திரண்ட வட்டித்தொகையும் கூட, இந்தச் சட்டத்தின்கீழ் தள்ளுபடி செய்யப்படும்.

குறித்த சில தொகைகளின் மொத்த தள்ளுபடி.

**8.** தொடர்புடைய சட்டம் அல்லது இந்தச் சட்டத்தில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதியன்று, ஒரு வரிக்கணிப்பு ஆண்டுக்கான வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் மொத்த நிலுவை, ஐம்பதாயிரம் ரூபாய் அல்லது அதற்கு குறைவாக இருப்பின், அந்தத் தேதியன்று முழுத்தொகையையும் தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும் மற்றும் வரிவிதிக்கப்பட்டவர், வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் அத்தகைய நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கான அவருடைய கடப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

தடைக்கட்டுகள்.

**9.** தொடர்புடைய சட்டத்தில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படக்கூடிய வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையின் நிலுவைகள் எதுவும், சூழ்நிலைகள் எதனின் கீழும்,—

(a) உள்ளீட்டு வரிவரவு கணக்கு மூலம் செலுத்துதலாகாது;

(b) மிகுதியான தொகை எதற்கும் எதிராக சரிக்கட்டப்படுதலாகாது; அல்லது

(c) திருப்பிக் கொடுக்கப்படுதலாகாது.

10. (1) 6–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட தொகையினை செலுத்தியது பற்றி மனநிறைவடைந்ததன் பேரில், நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, ஆணை ஒன்றின் வாயிலாக, வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை நிலுவைகளைத் தீர்வு செய்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் தீர்வு செய்தல் சான்றிதழ் ஒன்றினை வழங்குதல் வேண்டும் மற்றும் அதன்பேரில் விண்ணப்பதாரர் அத்தகைய வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை நிலுவையினை செலுத்தும் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தையும் பொறுத்த அளவில், தீர்வு செய்தல் சான்றிதழானது தனித்தனியாக வழங்கப்படுதல் வேண்டும். நிலுவைகளை தீர்வு செய்தல் மற்றும் சான்றிதழை வழங்குதல்.

**வரம்புரை.–** அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடானது, அதிகார அமைப்பு, தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம் எதனின் முன்பும் நிலுவையில் இருக்கும் நேர்வில், தீர்வு செய்தல் சான்றிதழ் வழங்கப்படுமிடத்து, அரசானது உடனடியாக மேல்முறையீட்டினை திரும்பபெறுதல் வேண்டும்.

(2) நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகையைத் தீர்வு செய்ய மறுக்கலாம்:

**வரம்புரை.–** இந்த உட்பிரிவின்படியான ஆணை எதுவும், அவ்வாறு ஆணை வழங்க மறுப்பதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு நியாயமானதொரு வாய்ப்பினை அந்த விண்ணப்பதாரருக்கு அளிக்காமல், பிறப்பிக்கப்படுதல் கூடாது.

(3) நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, (1)–ஆம் உட்பிரிவின்படியான சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், எந்நேரத்திலும், பதிவுருவில் பார்த்த மாத்திரத்திலேயே தென்படுகின்ற பிழை எதனையும் சரிசெய்து அச்சான்றிதழை மாற்றியமைக்கலாம்:

**வரம்புரை.–** விண்ணப்பதாரரை எதிர்மாறாகப் பாதிக்கின்ற அத்தகைய சரிசெய்தல் எதுவும், அத்தகைய சரிசெய்தலுக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு நியாயமானதொரு வாய்ப்பினை அந்த விண்ணப்பதாரருக்கு அளிக்காமல், செய்யப்படுதல் கூடாது.

11. 10–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபர் எவரும், இதன் பொருட்டு அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடலாகும் கூடுதல் வணிகவரி ஆணையாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் ஒருவரிடம் மேல்முறையீடு ஒன்றினைச் செய்யலாம். கூறப்பட்ட அலுவலரானவர், மேல்விசாரணைக்குப் பின்பு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பின் ஆணையை உறுதி செய்தோ அல்லது ஆணையை நீக்கம் செய்தோ அல்லது புதிய தீர்வு செய்தல் ஆணை ஒன்றினை பிறப்பிக்கவேண்டி நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பிற்கு கட்டளை வழங்கியோ மேல்முறையீட்டினை முடிவு செய்தல் வேண்டும். மேல்முறையீடு.

சீராய்வு.

**12.** (1) ஆணையாளர், தனது சொந்த நடவடிக்கையின் பேரில், எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, எந்நேரத்திலும், ஆணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குள், பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது அவற்றில் எடுக்கப்பட்ட முடிவின் பிழையின்மை, சட்ட முறைமை அல்லது பொருத்தமுடைமை குறித்து அவர் மனநிறைவடைவதற்கு, 10–ஆம் பிரிவு அல்லது 11–ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணை எதனையும் கோரி ஆய்வு செய்யலாம் மற்றும் எந்நேர்விலும் அத்தகைய ஆணை அல்லது முடிவு எதுவும் திருத்தியமைக்கப்பட, அறவு செய்யப்பட, எதிர்மாறாக்கப்பட அல்லது மறு பரிசீலனைக்காகத் திருத்தியனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று ஆணையாளருக்கு தோன்றுமானால் அவர் அதன்படியே ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

(2) நபர் எவருக்கும் அவருடைய கருத்தினை எடுத்துரைப்பதற்கு வாய்ப்பொன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய நபருக்கு குந்தகம் அளிக்கும் வகையில் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.

தீர்வு செய்யப்பட்ட வழக்குகளை மீண்டும் தொடர்வதற்கு தடை.

**13.** 10–ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தீர்வு செய்தல் சான்றிதழ் ஒன்று, அதற்கு தொடர்புடைய நிலுவைகளின் தீர்வு செய்தலை பொறுத்தவரையில் இறுதியானதாக இருத்தல் வேண்டும், மற்றும் அத்தகைய தீர்வு செய்தல் சான்றிதழில் அடங்கியுள்ள பொருட்பாடு எதுவும், மேல்முறையீடு, சீராய்வு அல்லது மறு ஆய்வு நடவடிக்கை எதிலும் அல்லது தொடர்புடைய சட்டத்தின்படியான பிற நடவடிக்கை எதிலும் மீண்டும் விசாரணையைத் தொடங்குதல் கூடாது.

சான்றிதழை திரும்பப் பெறுதல்.

**14.** (1) 13–ஆம் பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், முக்கிய தகவல் அல்லது விவரங்களை மறைத்ததன் மூலமாகவோ, அல்லது சரியற்ற அல்லது பொய்யான தகவலை அல்லது விவரங்களை அளித்ததன் மூலமாகவோ, 10–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படியான தீர்வு செய்தல் சான்றிதழை விண்ணப்பதாரர் ஒருவர் பெற்றுள்ளார் என நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்புக்குத் தோன்றுகிறவிடத்து, சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவிற்குள் நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, எழுத்துவடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக மற்றும் விண்ணப்பதாரருக்கு அதற்குரிய காரணம் காட்டுவதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினை வழங்கியப் பின்பு, சான்றிதழை திரும்பப் பெறலாம்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்கீழ் சான்றிதழ் ஒன்று திரும்பப் பெறப்பட்டதன் நேர்வில், 5–ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பத்துடன் சேர்த்து, விண்ணப்பதாரரால் செலுத்தப்பட்ட தொகையானது, தொடர்புடைய சட்டத்தின்கீழ் தொடர்புடைய வரிக்கணிப்பு ஆண்டிற்காக செலுத்தத்தக்க தொகையினை பொறுத்த செலுத்தமாகக் கருதப்படுதல் வேண்டும்.

தொடர்புடைய சட்டத்தின்கீழ் அதிகார அமைப்புகளுக்கு அனுப்பவேண்டிய தகவல்கள்.

**15.** நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, தொடர்புடைய சட்டத்தின்கீழ் விண்ணப்பதாரரின் மீது அப்போதைக்கு அதிகார வரம்பு பெற்றுள்ள, தொடர்புடைய சட்டத்தின்கீழ், நேர்விற்கேற்ப, வரிக்கணக்கீட்டு அதிகார அமைப்பு, மேல்முறையீட்டு அதிகார அமைப்பு, சீராய்வு அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றத்திற்கு,–

(a) 5–ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பதாரரால் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்ட விவரத்தை;

(b) நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பினால் 10–ஆம் பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனின் விவரத்தை;

(c) 10–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் கீழான சான்றிதழ் எதனின் தோற்றத்திலுள்ள பிழை எதுவும் சரி செய்யப்பட்ட விவரத்தை;

(d) 14–ஆம் பிரிவின்கீழ் சான்றிதழ் எதுவும் திரும்பப் பெறப்பட்ட விவரத்தை; மற்றும்

(e) அது, தேவையெனக் கருதக்கூடிய அத்தகைய பிற பொருட்பாடுகளை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய கால அளவிற்குள், தகவல் தெரிவித்தல் வேண்டும்.

வணிகவரி ஆணையாளரின் அதிகாரங்கள்.

16. வணிகவரி ஆணையாளர், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்புகளுக்கு அவர் பொருத்தமெனக் கருதலாகும் அறிவுறுத்தல்களையும் கட்டளைகளையும் அவ்வப்போது வழங்கலாம்:

வரம்புரை.– இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து ஓர் ஆண்டு காலாவதியான பிறகு அத்தகைய அறிவுறுத்தல்கள் அல்லது கட்டளைகள் எதுவும் வழங்கப்படுதல் கூடாது.

நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்புகளின் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட விவரங்களை வெளியிடு–வதற்குத் தடை.

17. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம், செய்யப்பட்ட விவரவுரை, முன்வைக்கப்பட்ட பதிவுருக்கள் அல்லது ஆவணங்கள் அல்லது இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கை எதனின் போதும் அல்லது இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்கான நடவடிக்கையில் வழங்கப்பட்ட சாட்சியம் அல்லது கொடுக்கப்பட்ட உறுதிமொழி ஆவணம் அல்லது வாக்குமூலம் ஆகியவற்றில் அடங்கியுள்ள அனைத்து விவரங்களானது மந்தணமானதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் வெளியிடப்படுதல் கூடாது.

மையச் சட்டம் XLV/1860

(2) (a) இந்தச் சட்டத்தின்படியான அல்லது 1860–ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின்படியான அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒன்றிற்காக புலனாய்வு அல்லது குற்ற வழக்கின் நோக்கத்திற்காக; அல்லது

(b) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அதை அவரிடம் வெளியிடத் தேவை ஏற்பட்டிருக்கிறவிடத்து இச்சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்தும் நபர் எவருக்கும்; அல்லது

(c) கேட்புத்தொகை எதனையும் மீளப்பெறும் செயல்முறை எதிலும் இந்தச் சட்டத்தின்கீழ் சட்டப்படியான பணி அமர்த்துகையால் ஏற்பட்ட; அல்லது

(d) அரசு, ஒரு தரப்பினராக உள்ள மற்றும் இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கை எதிலும் எழுகிற பொருட்பாடு எதனோடும் தொடர்புடைய உரிமை வழக்கு எதிலும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு; அல்லது

மையச் சட்டம் II/1899.

(e) முத்திரைத்தாள் போதுமற்றதாகவுள்ள ஆவணங்களை பறிமுதல் செய்ய 1899–ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி தமக்குரிய அதிகாரங்களை ஒரு பொது ஊழியரால் சட்டப்படி செலுத்தப்படுவதன் மூலம் ஏற்பட்ட; அல்லது

(f) (i) இந்திய அரசின் அலுவலர் ஒருவருக்கு, அல்லது

(ii) அரசுடன் பரிமாற்ற அடிப்படையில் வெளியிடுதலுக்கான ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்தியாவிலுள்ள ஏதேனும் மாநிலம் அல்லது நடுவணரசின் எல்லைகுட்பட்ட அரசின் அலுவலர் ஒருவருக்கு; அல்லது

(g) வணிகவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்ற பின்பு அரசின் வணிகவரித் துறை அல்லாத பிற துறை எதனின் அலுவலர் ஒருவர் ஆகியோருக்கு,

விவரங்கள் எவற்றையும் வெளியிடுவதற்கு, (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் பொருந்துதலாகாது:

வரம்புரை.– இக்கூறின்படி அத்தகைய விவரங்களை விதிவிலக்கான நேர்வுகளில் மட்டுமே வழங்குதல் வேண்டும் மற்றும் அத்தகைய விவரங்களைப் பெறும் அலுவலர் எவரும் அவற்றை மந்தணமானதாக வைத்திருத்தல் மற்றும் இயற்றுச்சட்டம் எதன்படியான அல்லது அதனையொட்டி, வழங்கப்பட்ட அதிகாரங்களைச் சட்டப்படி செலுத்தும் போது மட்டுமே அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

(3) இதில் அடங்கிய எதுவும், வகுத்துரைக்கப்பட்ட முறையில் தீர்வு செய்தல் சான்றிதழின் வெளியீடு அல்லது விண்ணப்பம் எதனின் நிராகரித்தலை தடுத்தல் கூடாது.

நல்லெண்ணத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

18. (1) இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டிய செயல் எதற்காகவும் அரசின் அலுவலர் அல்லது பணியாளர் எவருக்கெதிராகவும் உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற நடவடிக்கை எதுவும், அரசின் முன் ஒப்புதலின்றி தொடரப்படுதல் ஆகாது.

(2) இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது அதனால் விதிக்கப்பட்ட கடமைகளை செயலுருத்துகையில் அல்லது செயல்பாடுகளை நிறைவேற்றுகையில், அந்தச் செயலானது நல்லெண்ணத்தில் செய்யப்பட்டால், அரசு அலுவலர் அல்லது பணியாளர் எவரும் உரிமையியல் அல்லது குற்றவியல் வழக்கு எதிலும் அத்தகைய செயல் எதனையும் பொறுத்து பொறுப்புடையவராகார்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

19. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசானது, ஆணை ஒன்றின் மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதற்கும் முரணாக இல்லாத வகையில் அத்தகைய இடர்பாட்டை நீக்கலாம்:

வரம்புரை.– அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஓர் ஆண்டு காலாவதியான பின்னர் செய்யப்படுதல் ஆகாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

20. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, முன்னோக்கியதாகவோ அல்லது பின்னோக்கியதாகவோ, விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்கீழ், செய்யப்பட்ட விதி அல்லது அறிவிக்கை அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஏதொன்றிலும் மாற்றம் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின் அல்லது அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையானது செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின் அதன்பின்னர் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே, நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நடைமுறைக்கு வராதுபோதல் வேண்டும். எனினும், அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கு குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது வரி விதித்தல் முறையானது 2017 ஜுலை 1–ஆம் தேதியிலிருந்து தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1959), 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1971), 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1970), 1981–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 6/1981), 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருட்களை கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2001), 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/1990), 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1939), 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1983), 1935–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் XX/1935) ஆகிய பல்வேறு நீக்கறவு செய்யப்பட்ட சட்டங்களின்கீழ் மற்றும் 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) மற்றும் 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டத்தின்கீழும் (மையச் சட்டம் 74/1956) அதிக அளவிலான வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை நிலுவையில் உள்ளன. 2016, 2017, 2018 மற்றும் 2019–ஆம் ஆண்டுகளில் கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 32/2006–இன்கீழ் உள்ளீட்டு வரிவரவு திரும்பப் பெறுதல் மற்றும் நுழைவு வரி இயற்றுச் சட்டங்களின்கீழ் இயக்கூர்திகள் மற்றும் பொருட்கள் மீதான நுழைவு வரிவிதிப்பு ஆகியன மாண்பமை நீதிமன்றங்களால் நிலை நிறுத்தப்பட்டுள்ளதால், கோரிக்கைகள் நீண்ட காலத்திற்கு மேலாக குவிந்துள்ளன. அத்தகைய முடிவுகள், சிறப்பான தீர்ப்பின்கீழ் செய்யப்பட்ட வரிக் கணக்கீடுகளின் விளைவாக விதிக்கப்பட்ட வரிகள், மற்றும் அதன் விளைவாக விதிக்கப்பட்ட தண்டத்தொகை மற்றும் அதன் மீதான வட்டித்தொகை, வணிகர்களால் செலுத்த இயலவில்லை.

2. நிலுவைத் தொகைகளை விரைவாக வசூலிக்கும் நோக்குடன், 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2006), 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 60/2008), 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2010) மற்றும் 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/2011) ஆகிய இயற்றுச் சட்டங்களின் மூலம் 2006, 2008, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் சமாதானத் திட்டங்களானது நடைமுறைப்படுத்தப்பட்டன. எனினும், தொடர்புடைய சட்டங்களின்கீழ் அரசுக்கு செலுத்த வேண்டிய கணிசமான நிலுவைத் தொகையானது வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது.

3. 2021–2022–ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கை அறிமுகம் செய்யப்பட்டபோது, தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட பிற வரிவிதிப்பு சட்டங்களின் கீழுள்ள ரூ.28,000 கோடி நிலுவையினை சரிசெய்ய பயனுள்ள சமாதான திட்டம் ஒன்று தொடங்கப்படும் என 13 ஆகஸ்ட், 2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அரசானது அறிவித்திருந்தது.

4. மேற்கண்ட அறிவிப்பைக் கருத்தில் கொண்டும், நிலுவையிலுள்ள வழக்குகளை விரைவாக தீர்வு காண்பதற்காக, சமாதானத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்காக பல்வேறு வணிகச் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட முறையீடுகளை கருத்தில் கொண்டும், வணிகர்களின் சிரமங்களை தணிப்பதற்காகவும், வரி வழக்குகளைக் குறைப்பதற்காகவும், அரசானது மார்ச் 31, 2021 தேதியன்று அல்லது அதற்கு முன் செய்யப்பட்ட 2017–2018 வரையிலான (அதாவது 30.06.2017) வரிக்கணிப்பு ஆண்டுகளுக்கான கூறப்பட்ட சட்டங்களின்படி வரிக்கணிப்புகள் தொடர்பாக அரசுக்கு செலுத்த வேண்டிய வரி, தண்டத்தொகை மற்றும் வட்டித்தொகை ஆகியவற்றின் நிலுவைத் தொகையை தீர்வு செய்ய வணிகர்களுக்கு மற்றொரு வாய்ப்பை வழங்க முடிவு செய்துள்ளது.

5. இந்த சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(3), 3, 5(1), 10, 11, 15, 16, 19 மற்றும் 20 ஆகிய கூறுகள் அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகள், ஆணைகள் அல்லது பணிப்புரைகள் அல்லது அறிவுரைகள் அல்லது விதிகளை செய்வதற்கு, அரசு மற்றும் ஆணையாளருக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/2023**

**2017—ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2023—ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இந்தச் சட்டத்தில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறல்லாமல்,—

(i) 2 முதல் 24 வரையிலான பிரிவுகளானது (14 முதல் 19—ஆம் பிரிவுகள் தவிர) 2023-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ii) 14 முதல் 19 வரையிலான பிரிவுகளானது 2023—ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

10—ஆம் பிரிவின் திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2017—ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் 10—ஆம் பிரிவில்,— தமிழ்நாடு சட்டம் 19/2017.

(1) (2)—ஆம் உட்பிரிவில், (d) கூறில், "சரக்குகள் அல்லது" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (2A)-ஆம் உட்பிரிவில், (c) கூறில், "சரக்குகள் அல்லது" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

16—ஆம் பிரிவின் திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 16—ஆம் பிரிவில், (2)—ஆம் உட்பிரிவில்,—

(1) இரண்டாம் வரம்புரையில், "அவரது வெளியீட்டு வரி பொறுப்புடன், அதன் மீதான வட்டியுடன், சேர்த்துக்கொள்ளப்படும்" எனும் சொற்றொடருக்காக, "50—ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படக்கூடிய வட்டியுடன் சேர்த்து அவரால் செலுத்தப்படும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) மூன்றாம் வரம்புரையில், "அவரால் செலுத்தப்படுவதன்" எனும் சொற்றொடருக்குப் பின்பு, "வழங்குநருக்கு" எனும் சொல்லானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டத்தின் 17–ஆம் பிரிவில்,– 17–ஆம் பிரிவின் திருத்தம்.

(1) (3)-ஆம் உட்பிரிவில், விளக்கத்தில், ''கூறப்பட்ட இணைப்புப் பட்டியலின் 5–ஆம் பத்தியில் குறித்துரைக்கப்பட்டவை தவிர'' எனும் சொற்றொடருக்காக, பின்வருவன மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

''(a) கூறப்பட்ட இணைப்புப் பட்டியலின் 5–ஆம் பத்தியில் குறித்துரைக்கப்பட்ட செயல்கள் அல்லது நடவடிக்கைகளின் மதிப்பைத் தவிர; மற்றும்

(b) கூறப்பட்ட இணைப்புப் பட்டியலின் 8–ஆம் பத்தியின் (a) கூறினைப் பொறுத்து வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய செயல்கள் அல்லது நடவடிக்கைகளின் மதிப்பைத் தவிர.'';

(2) (5)–ஆம் உட்பிரிவில், (f) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

மையச் சட்டம் 18/2013. ''(ff) 2013–ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின், 135–ஆம் பிரிவில் சுட்டப்பட்ட கூட்டுரும சமூகப் பொறுப்பின்கீழ் அவருடைய பொறுப்பு தொடர்பான செயல்களுக்கு பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தக் கருதப்படுகிற, வரிவிதிக்கத்தக்க நபரால் பெறப்படும் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டும்;''.

5. முதன்மைச் சட்டத்தின் 23–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் 2017–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 1–ஆம் நாளன்றிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும், அதாவது :– 23–ஆம் பிரிவின் திருத்தம்.

''(2) 22–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவு அல்லது 24–ஆம் பிரிவிற்கு முரணாக என்ன அடங்கியிருந்த போதிலும், அரசானது, மன்றத்தின் பரிந்துரையின் பேரில், அறிவிக்கை வாயிலாக, அதில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு பெறுவதிலிருந்து விலக்களிக்கப்படலாகும் நபர்களின் வகையினரைக் குறித்துரைக்கலாம்.''.

6. முதன்மைச் சட்டத்தின் 30–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில்,– 30–ஆம் பிரிவின் திருத்தம்.

(1) ''ரத்து ஆணை சார்வு செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்பட்ட முறையில்'' எனும் சொற்றொடருக்காக, ''வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், அத்தகைய காலத்திற்குள் மற்றும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) வரம்புரையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

7. முதன்மைச் சட்டத்தின் 37–ஆம் பிரிவில், (4)-ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– 37–ஆம் பிரிவின் திருத்தம்.

''(5) பதிவு பெற்ற நபர் ஒருவர், கூறப்பட்ட விவரங்களை அளிப்பதற்கான உரிய தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கால அளவு காலாவதியான பின்பு, ஒரு வரி கால அளவிற்காக, (1)–ஆம் உட்பிரிவின்கீழ் வெளிப்புற வழங்குகைகள் பற்றிய விவரங்களை அளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது:

வரம்புரை.— அரசு, மன்றத்தின் பரிந்துரையின் பேரில், அறிவிக்கை வாயிலாக, அதில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, கூறப்பட்ட விவரங்களை அளிப்பதற்கான உரிய தேதியிலிருந்து கூறப்பட்ட கால அளவான மூன்று ஆண்டுகள் காலாவதியான பின்பும் கூட, (1)—ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு வரி கால அளவிற்காக, வெளிப்புற வழங்குகைகள் பற்றிய விவரங்களை அளிப்பதற்கு பதிவு பெற்ற நபர் அல்லது பதிவு பெற்ற நபர்களின் வகையினரை அனுமதிக்கலாம்.''.

39—ஆம் பிரிவின் திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 39—ஆம் பிரிவில், (10)—ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(11) பதிவு பெற்ற நபர் ஒருவர், கூறப்பட்ட அறிக்கையை அளிப்பதற்கான உரிய தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கால அளவு காலாவதியான பின்பு, ஒரு வரி கால அளவிற்காக, அறிக்கை ஒன்றை அளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது:

வரம்புரை.— அரசு, மன்றத்தின் பரிந்துரையின் பேரில், அறிவிக்கை வாயிலாக, அதில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, கூறப்பட்ட அறிக்கையை அளிப்பதற்கான உரிய தேதியிலிருந்து கூறப்பட்ட கால அளவான மூன்று ஆண்டுகள் காலாவதியான பின்பும் கூட, ஒரு வரி கால அளவிற்காக, அறிக்கையை அளிப்பதற்கு பதிவு பெற்ற நபர் அல்லது பதிவு பெற்ற நபர்களின் வகையினரை அனுமதிக்கலாம்.''.

44—ஆம் பிரிவின் திருத்தம்.

9. முதன்மைச் சட்டத்தின் 44—ஆம் பிரிவானது, அதன் (1)—ஆம் உட்பிரிவு என மறு எண்ணிடப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1)—ஆம் உட்பிரிவிற்குப் பிறகு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(2) பதிவு பெற்ற நபர் ஒருவர், கூறப்பட்ட ஆண்டறிக்கையை அளிப்பதற்கான உரிய தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கால அளவு காலாவதியான பின்பு, ஒரு நிதியாண்டிற்காக, (1)—ஆம் உட்பிரிவின்கீழ் ஆண்டறிக்கையை அளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது:

வரம்புரை.— அரசு, மன்றத்தின் பரிந்துரையின் பேரில், அறிவிக்கை வாயிலாக, அதில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, (1)—ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு நிதியாண்டிற்கான கூறப்பட்ட ஆண்டறிக்கையை அளிப்பதற்கான உரிய தேதியிலிருந்து கூறப்பட்ட கால அளவான மூன்று ஆண்டுகள் காலாவதியான பின்பும் கூட, ஓர் ஆண்டறிக்கையை அளிப்பதற்கு பதிவு பெற்ற நபர் அல்லது பதிவு பெற்ற நபர்களின் வகையினரை அனுமதிக்கலாம்.

52—ஆம் பிரிவின் திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 52—ஆம் பிரிவில், (14)—ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(15) இயக்குபவரானவர், கூறப்பட்ட விவரவுரையை அளிப்பதற்கான உரிய தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கால அளவு காலாவதியான பின்பு, (4)—ஆம் உட்பிரிவின்கீழ் விவரவுரை ஒன்றை அளிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது:

வரம்புரை.— அரசு, மன்றத்தின் பரிந்துரையின் பேரில், அறிவிக்கை வாயிலாக, அதில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, (4)—ஆம் உட்பிரிவின்கீழ் விவரவுரையை அளிப்பதற்கான உரிய தேதியிலிருந்து கூறப்பட்ட கால அளவான மூன்று ஆண்டுகள் காலாவதியான பின்பும் கூட, ஒரு விவரவுரையை அளிக்க இயக்குபவர் அல்லது இயக்குபவர்கள் வகையினரை அனுமதிக்கலாம்.''.

**11.** முதன்மைச் சட்டத்தின் 54–ஆம் பிரிவில், (6)–ஆம் உட்பிரிவில், "தற்காலிகமாக ஏற்றுக் கொண்ட உள்ளீட்டு வரிவரவுத் தொகையைத் தவிர்த்து" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 54–ஆம் பிரிவின் திருத்தம்.

**12.** முதன்மைச் சட்டத்தின் 56–ஆம் பிரிவில், "மேற்சொன்ன உட்பிரிவின்கீழ் விண்ணப்பத்தை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து அத்தகைய வரியைத் திருப்பிக் கொடுக்கும் தேதி வரையில் அறுபது நாட்கள் முடிவடைந்த பின்பு உடனடியாக வரும் தேதியிலிருந்து" எனும் சொற்றொடருக்காக, "வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு கணக்கிடப்படக்கூடிய, அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்கு மேற்பட்டு, அத்தகைய வரியைத் திரும்பப் பெறும் தேதி வரையிலான தாமதத்தின் கால அளவிற்காக" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 56–ஆம் பிரிவின் திருத்தம்.

**13.** முதன்மைச் சட்டத்தின் 62–ஆம் பிரிவில்,– 62–ஆம் பிரிவின் திருத்தம்.

(1) (2)–ஆம் உட்பிரிவில், "முப்பது நாட்கள்" எனும் சொற்றொடருக்காக, "அறுபது நாட்கள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட (2)–ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"வரம்புரை.– பதிவு பெற்ற நபர், (1)–ஆம் உட்பிரிவின்கீழ் வரிக்கணிப்பு ஆணையைச் சார்வு செய்த அறுபது நாட்களுக்குள் செல்லுந்தன்மையுள்ள அறிக்கையை அளிக்கத் தவறுகிறவிடத்து, அவர் மேலும் அறுபது நாட்கள் கால அளவிற்குள், கூறப்பட்ட வரிக்கணிப்பு ஆணையைச் சார்வு செய்த அறுபது நாட்களுக்கு மேற்பட்டு தாமதமான ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் கூடுதல் தாமதக் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், அந்த அறிக்கையை அளிக்கலாம், மற்றும் அவர் அத்தகைய நீட்டிக்கப்பட்ட கால அளவிற்குள் செல்லுந்தன்மையுள்ள அறிக்கையை அளிக்கிற நேர்வில், கூறப்பட்ட வரிக்கணிப்பு ஆணையானது திரும்ப பெற்றதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால், 50–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்கீழ் வட்டியை அல்லது 47–ஆம் பிரிவின்கீழ் தாமதக்கட்டணத்தை செலுத்தும் பொறுப்பு தொடருதல் வேண்டும்.".

**14.** முதன்மைச் சட்டத்தின் 109 பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 109–ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

மையச் சட்டம் 12/2017. "**109. மேல்முறையீட்டு தீர்ப்பாயம்–** இந்த அத்தியாயத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, 2017–ஆம் ஆண்டு மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்ப்பாயமானது இந்தச் சட்டத்தின்கீழ் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது சீராய்வு அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமாக இருத்தல் வேண்டும்.

**15.** முதன்மைச் சட்டத்தின் 110–ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 110–ஆம் பிரிவை விட்டுவிடுதல்.

**16.** முதன்மைச் சட்டத்தின் 114–ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 114–ஆம் பிரிவை விட்டுவிடுதல்.

117–ஆம் பிரிவின் திருத்தம்.

17. முதன்மைச் சட்டத்தின் 117–ஆம் பிரிவில்–

(1) (1)–ஆம் உட்பிரிவில், ''மாநில நீதியர் ஆயம் அல்லது வட்டார நீதியர் ஆயங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''மாநில நீதியர் ஆயங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (5)–ஆம் உட்பிரிவில், இரு இடங்களில் காணப்படுகின்ற, ''மாநில நீதியர் ஆயம் அல்லது வட்டார நீதியர் ஆயங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''மாநில நீதியர் ஆயங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

118–ஆம் பிரிவின் திருத்தம்.

18. முதன்மைச் சட்டத்தின் 118–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''தேசிய நீதியர் ஆயம் அல்லது மண்டல நீதியர் ஆயங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''முதன்மை நீதியர் ஆயம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

119–ஆம் பிரிவின் திருத்தம்.

19. முதன்மைச் சட்டத்தின் 119–ஆம் பிரிவில்,–

(1) ''தேசிய அல்லது மண்டல நீதியர் ஆயங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''முதன்மை நீதியர் ஆயம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''மாநில நீதியர் ஆயம் அல்லது வட்டார நீதியர் ஆயங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''மாநில நீதியர் ஆயங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

122–ஆம் பிரிவின் திருத்தம்.

20. முதன்மைச் சட்டத்தின் 122–ஆம் பிரிவில், (1A)–ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

''(1B) (i) அத்தகைய வழங்குகையைச் செய்ய, இந்தச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி பதிவு செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஒரு நபர் அல்லாத பிற பதிவு செய்யப்படாத நபரின் மூலம், சரக்குகளின் அல்லது சேவைகளின் அல்லது அவை இரண்டின் வழங்குகையை அனுமதிக்கின்ற;

(ii) அத்தகைய, மாநிலங்களுக்கு இடையேயான வழங்குகையைச் செய்ய தகுதியற்ற ஒரு நபரின் மூலம், மாநிலங்களுக்கு இடையேயான சரக்குகளின் அல்லது சேவைகளின் அல்லது அவை இரண்டின் வழங்குகையை அனுமதிக்கின்ற; அல்லது

(iii) இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஒரு நபரால், அதன் மூலமாக செய்யப்படும் சரக்குகளின் வெளிப்புற வழங்குகை எதனின், 52–ஆம் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட வேண்டிய விவர அறிக்கையில் சரியான தகவல்களை அளிக்கத் தவறுகின்ற,

எந்தவொரு மின்னணு வணிகம் இயக்குபவரும், 10–ஆம் பிரிவின்கீழ் வரி செலுத்தும் ஒரு நபர் அல்லாத பிற ஒரு பதிவு பெற்ற நபரால் செய்யப்பட்டுள்ள அத்தகைய வழங்குகையில் உள்ளடங்கியுள்ள வரித்தொகைக்கு சமமான தொகை அல்லது பத்தாயிரம் ரூபாய், இதில் எது அதிகமோ, அந்த தண்டத்தொகையைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவராதல் வேண்டும்.

**21.** முதன்மைச் சட்டத்தின் 132–ஆம் பிரிவில், (1)-ஆம் உட்பிரிவில்,– 132–ஆம் பிரிவின் திருத்தம்.

(1) (g), (j) மற்றும் (k) கூறுகளானவை விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (l) கூறில்,–

(a) "(a) முதல் (k) வரையிலான கூறுகள்" எனும் சொற்றொடருக்காக, "(a) முதல் (f) கூறுகள் மற்றும் (h) மற்றும் (i) கூறுகள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (iii)–ஆம் உட்கூறில், "பிற குற்றம் எதனையும்" எனும் சொற்றொடருக்காக, "(b) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (iv)–ஆம் உட்கூறில், "அல்லது (g) கூறு அல்லது (j) கூறு" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**22.** முதன்மைச் சட்டத்தின் 138–ஆம் பிரிவில்,– 138–ஆம் பிரிவின் திருத்தம்.

(1) (1)–ஆம் உட்பிரிவில், முதலாம் வரம்புரையில்,–

(i) (a) கூறுக்காக, பின்வரும் கூறானது, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(a) 132–ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் (a) முதல் (f) வரை, (h), (i) மற்றும் (l) கூறுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் எதனையும் பொறுத்து ஒருமுறை சமரசம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு நபர்;";

(ii) (b) கூறு விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(iii) (c) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(c) 132–ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் (b) கூறின்கீழ் ஒரு குற்றம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒரு நபர்;";

(iv) (e) கூறு விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (2)-ஆம் உட்பிரிவில், "பத்தாயிரம் ரூபாய்க்கு அல்லது உள்ளடங்கியுள்ள வரியின் ஐம்பது விழுக்காடு, இதில் எது அதிகமோ, மற்றும் முப்பதாயிரம் ரூபாய்க்கு அல்லது வரியின் நூற்றி ஐம்பது விழுக்காடு, இதில் எது அதிகமோ, அதற்கு குறையாத அதிகபட்ச தொகைக்கு" எனும் சொற்றொடருக்காக, "உள்ளடங்கியுள்ள வரியின் இருபத்தைந்து விழுக்காடு மற்றும் உள்ளடங்கியுள்ள வரியின் நூறு விழுக்காடுக்கு மேற்படாத அதிகபட்ச தொகைக்கு" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

158–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

23. முதன்மைச் சட்டத்தின் 158–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**158–A. வரிவிதிக்கத்தக்க நபரால் அளிக்கப்பட்ட தகவல் பகிர்தலின் அடிப்படையிலான இசைவு–** (1) 133, 152 மற்றும் 158–ஆம் பிரிவுகளில் என்ன அடங்கியிருந்த போதிலும், ஒரு பதிவு செய்யப்பெற்ற நபரால் அளிக்கப்பட்ட பின்வரும் விவரங்கள், (2)–ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, மற்றும் மன்றத்தின் பரிந்துரையின் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு மற்றும் அத்தகைய முறையிலும், அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய பிற அமைப்புகளுடன் பொது வலைவாயிலில் பகிரலாம், அவையாவன:–

(a) 25–ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் அல்லது 39–ஆம் பிரிவின்கீழ் அல்லது 44–ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை;

(b) விலைப்பட்டியல் தயாரிப்பதற்கான பொது வலைவாயிலில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள், 37–ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட வெளிப்புற வழங்குகைகளின் விவரங்கள் மற்றும் 68–ஆம் பிரிவின்கீழ் ஆவணங்கள் தயாரிப்புக்கான பொது வலைவாயிலில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள்;

(c) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற விவரங்கள்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்கீழ் விவரங்கள் பகிர்தலின் நோக்கங்களுக்காக,–

(a) (1)–ஆம் உட்பிரிவின் (a), (b) மற்றும் (c) கூறுகளின்கீழ் அளிக்கப்பட்ட விவரங்களைப் பொறுத்து வழங்குநரின் ; மற்றும்

(b) (1)–ஆம் உட்பிரிவின் (b) கூறின்கீழ் அளிக்கப்படும் விவரங்கள் பொறுத்தும், மற்றும் (1)–ஆம் உட்பிரிவின் (c) கூறின்கீழ் அளிக்கப்படும் அத்தகைய விவரங்கள் பெறுநரின் அடையாளத் தகவலை உள்ளடக்குவதாக மட்டும் இருக்கின்றவிடத்து பெறுநரின்,

இசைவானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் முறையிலும் பெறப்படுதல் வேண்டும்.

(3) அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தப் பிரிவின்கீழ் பகிரப்படும் தகவலின் விளைவாக எழும் பொறுப்பு எதனின் தொடர்பாக அரசு அல்லது பொது வலைவாயிலுக்கு எதிராக எந்தவொரு வழக்கும் தொடுக்கப்படுதல் ஆகாது மற்றும் தொடர்புடைய வழங்குகையின் மீது அல்லது தொடர்புடைய அறிக்கையின்படி வரி செலுத்தும் பொறுப்பில் பாதிப்பு எதுவும் இருத்தல் ஆகாது.".

III–ஆம் இணைப்புப் பட்டியலில் உள்ள குறித்த சில செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு முன்மேவு விலக்களிப்பு.

24. (1) முதன்மைச் சட்டத்தின் III–ஆம் இணைப்புப் பட்டியலில், அதனின் 7 மற்றும் 8–ஆம் பத்திகள் மற்றும் விளக்கம் 2 ஆகியன 2017–ஆம் ஆண்டு ஜீலை 1–ஆம் நாளிலிருந்து செயலுக்கு வருமாறு அதனில் உட்புகுத்தப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

(2) அனைத்து முக்கியமான நேரங்களில் (1)–ஆம் உட்பிரிவானது நடைமுறையில் இருந்து, ஆனால், அவ்வாறு வரி வசூலிக்கப்படாமல் இருந்தால், வசூலிக்கப்பட்டுள்ள அனைத்து வரியும் திருப்பிக் கொடுக்கப்படுதல் ஆகாது.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

2017ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 19/2017) மாநிலத்திற்குள் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவ்விரண்டின் வழங்குகையின் மீது வரிவிதிப்பதற்கு மற்றும் வசூலிப்பதற்கு வழிவகை செய்யும் நோக்கத்துடன் மாநில அரசால் இயற்றப்பட்டது.

2. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றமானது முறையே, ஜூன் 28 மற்றும் 29, 2022, டிசம்பர் 17, 2022 மற்றும் பிப்ரவரி 18, 2023 ஆகிய தேதிகளில் நடைபெற்ற அதன் 47–வது, 48–வது மற்றும் 49–வது கூட்டங்களில், 2017–ஆம் ஆண்டு மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் (மையச் சட்டம் 12/2017) பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ள பரிந்துரைத்துள்ளது. கூறப்பட்ட பரிந்துரைகளுக்கு செயல்வடிவம் கொடுக்க, மைய அரசானது, 2023–ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின் (மையச் சட்டம் 8/2023) மூலம் கூறப்பட்ட மையச் சட்டத்தை திருத்தம் செய்தது. எனவே, 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 19/2017) தொடர்புடைய திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும். எனவே, தமிழ்நாடு சட்டம் 19/2017–ஐ தக்கவாறு திருத்துவதென அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்ட முன்வடிவின் 4, 5, 6, 7, 8, 9, 10, 12 மற்றும் 23 ஆகிய கூறுகள் அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அறிவிக்கைகள் அல்லது விதிகளைச் செய்வதற்கு, நேர்வுக்கேற்ப, அரசுக்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/2023**

**1982—ஆம் ஆண்டு சீட்டு நிதி சட்டத்தை தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்தும் வகையில் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு சீட்டு நிதி (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் 40/1982. 2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1982—ஆம் ஆண்டு சீட்டு நிதி சட்டத்தின் 70—ஆம் பிரிவானது, அந்தப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும்,— 70—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், ''மாநில அரசு'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது அதன் பொருட்டு அறிவிக்கையின் வாயிலாக, மாநில அரசால் அதிகாரமளிக்கப்படலாகிறவாறான அத்தகைய அலுவலர் அல்லது அதிகார அமைப்பிற்கு'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

(2) அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(2) அத்தகைய அலுவலருக்கோ அல்லது அதிகார அமைப்பிற்கோ அதிகாரம் அளிக்கும் அறிவிக்கையின் தேதியன்று, மாநில அரசின் முன்பு நிலுவையிலுள்ள மேல்முறையீடு ஒவ்வொன்றும், அந்தத் தேதியன்று அத்தகைய அலுவலருக்கோ அல்லது அதிகார அமைப்பிற்கோ மாற்றம் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அது அத்தகைய அலுவலர் அல்லது அதிகார அமைப்பின் முன்பு தாக்கல் செய்யப்பட்டிருந்தாற்போன்று, முடிவு செய்யப்படுதல் வேண்டும்.''.

3. முதன்மைச் சட்டத்தின் 84—ஆம் பிரிவில், ''(மேல்முறையீடுகளை விசாரிப்பதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கான அதிகாரத்தைத் தவிர)'' எனும் சொற்றொடருக்காக, ''விதிகளைச் செய்வதற்கான அதிகாரத்தைத் தவிர'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 84—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1982–ஆம் ஆண்டு சீட்டு நிதி சட்டத்தின் 69–ஆம் பிரிவின்கீழ், பதிவாளர் அல்லது அவரது நியமனதாரரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது தீர்ப்பினால் இடருற்ற எந்தவொரு நபரும், அச்சட்டத்தின் 70–ஆம் பிரிவின்கீழ் மாநில அரசிடம் மேல்முறையீடு செய்யலாம். இப்பிரிவின்கீழ் மாநில அரசிடம் அதிக எண்ணிக்கையில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், கூறப்பட்ட மேல்முறையீடுகளை முடித்துவைப்பதற்கு ஏற்கத்தக்க அளவில் தாமதம் ஏற்படுகிறது.

2. மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் கூறப்பட்ட அதிகாரத்தை கீழமை அலுவலர்களுக்கு ஒப்படைவு செய்வது அவசியமென கருதப்படுகிறது. ஆனால், கூறப்பட்ட சட்டத்தின் 84–ஆம் பிரிவானது மேல்முறையீடுகளை விசாரிக்கும் மாநில அரசு, அதிகார ஒப்படைவு செய்வதை தடை செய்கிறது. அத்தகைய மேல்முறையீடுகளை விரைந்து முடிப்பதற்கு வழிவகைசெய்யும் பொருட்டு, மேல்முறையீடுகளை விசாரிப்பதற்கான அதிகாரத்தை கீழமை அலுவலர்கள் அல்லது அதிகார அமைப்புகளுக்கு ஒப்படைவு செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கும் விதமாக, கூறப்பட்ட மையச் சட்டத்தின் 70–ஆம் மற்றும் 84–ஆம் பிரிவுகளை தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்தும் வகையில் திருத்தம் செய்வதென மாநில அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்த சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 10.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்ட முன்வடிவின் 2(1) மற்றும் 3 ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கோ அல்லது விதிகளை செய்வதற்கோ, அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.